# சித்திரை நக்ஷத்ரம் (ஆத்ம லிங்கம்)



**<u>1. கணபதி வழிபாடு</u>**

பரசிவம், சின்மயம், பூரணம்,
சிவபோகபாக்யம் பரமநிதியம்

**<u>2. திருவருட்பாவில் சிவ சித்திரை சக்தி</u>**

பகர்சுபாவம், புனிதம், அதுல மதுலிதம்,
பராம்பரம்நிராலம்பனம்.

**<u>3. திருப்பாவைபாசுரம் – 6 சித்திரை இயல்பு</u>**

புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ
பிள்ளாய் எழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குறிர்ந்தேலோ ரெம்பாவாய்.

**Video Link : https://youtu.be/mqinDTSob5M**

**<u>விளக்கம் :</u>**

புள்ளும் சிலம்பின காண் அகில உலகத்தில் வெளிப்படையானது பறவை இனமேயாகும்.

இந்த சுபாவமான வெளிப்படை அனுபவத்தில் தலைசிறந்து விளங்கும் பறவைகளின் அரசன் கருடன் சித்திரை நக்ஷத்ரம் தான். எனவே, கருடனின் கோயிலில் வெள்ளி வெள்ளை விளிசங்கின் போராட்டம் கேட்டிலையோ? வெள்ளை மனம் கொண்ட சித்திரை நக்ஷத்ரம் உலகத்தை கருட பார்வையில்

துல்லியமாக கணிக்கக்கூடியவர்கள். மேலும், இந்த கருடப்பார்வையும், ஆருடப் பேச்சும் சக்திவாய்ந்த புரட்சியை எதார்த்தமாக வெளிப்படுத்தும்.

எண்ணங்கள் புதிர்கள் அல்ல புரட்சியாகும். சித்திர குப்தனின் கணக்குகள் பொய் ஆகாது. எனவே அதற்கு உண்டானவைகளாக மாறும். பொய் முறையானாலும் கலக்கழிய காலோச்சி வெற்றி காண்பவர்கள் சித்திரை நக்ஷத்ரதாரர்கள் ஆவார். அதாவது புரட்சியான எண்ணங்கள் சரியான தத்துவத்தின் கீழ் சொல்லாகவும், செயலாகவும் மாற்றி தருவதையே முனிவர்களும், யோகிகளும் பாராட்டி பேசுவார்கள்.

பாமர மக்கள் உள்ளம் புகுந்து, பகுத்தறிந்து பாவ புண்ணியங்களை நன்கு சடங்குகள் சங்கடங்கள் இவைகளையே தவிர்த்து ஆன்ம நேயத்தையே வெளிப்படுத்தும் உள்ளம் கொண்ட சித்திரையே வருக! குளிர்ந்த அருளை பொழிக! மனிதன் மனிதனாக வாழ கற்றுக் கொடுப்பதையே சித்திரையின் கருடபஞ்சமி ஆதாரங்களாகும். மேலும் இவை தற்காலத்தின் அருட்பாக்களாகும். இந்த அருட்பாவின் அறிக என்கிற பேரரவம் (ஹரி) உள்ளம் புகுந்து குளிரச் செய்யும்.

கடல் நடுவே பாம்பணை மேல் பள்ளி கொண்ட பரமன், வெள்ளத்தரவில் துயிலமர்ந்த விதம் சித்திரையென்னும், திறந்த வெளிப்படையான பகர் சுபாவமாகும். இந்த சிறந்த வெளிப்படையான பகர் சுபாவத்தை முனிவர்களும், யோகிகளும், வேத விற்பன்னர்களும், தகுந்த மதிப்பும், மரியாதையும், தந்து சிறப்பு செய்கின்றனர். இந்த பராம்பர நிராலம்பனாய் என்பது அடிமுடி காணாத அறிவை வெளிப்படுத்துவதாகும். பிரம்மாண்டத்தை புலப்படுத்துவதாகும்.

பறவைகளின் அரசனான கருடன் உச்சியில் பறந்தாலும், உலகத்தை கருடப்பார்வையில் கூர்ந்து நோக்கி அத்தனையும் உள்வாங்கக்கூடிய திறமை சித்திரையின் சுபாவமே.

பாம்பனையும் பறவை அரசனும் விநோத கலவையாகும். வெள்ளை விளிச்சங்கு புனிதத்தின் வெளிப்பாடாகும். இந்த ஹரி என்ற பேரரவம் உலகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் சித்திரையின் கருத்துக்களாக சென்றடையும். பூதகியை ஒழிப்பதிலும் ஒரு புரட்சி, பேய்முலை நஞ்சுண்டு, பூதகியின் பேய் உள்ளத்தை அழித்தது போல எதிரிகளை சித்திரையினர் வித்தியாசமாக கையாளுவார்கள். கள்ள சக்தியை தூளாக்கும் வல்லமை சித்திரைக்கு உண்டு. சித்திரையின் கணக்கு உள்ளம் புகுந்து துல்லியமாக படம் பிடிக்கும். சித்திரையே வருக! சித்திரையே அருள்க!

## 4. வேதத்தில் சித்திரை ஜோதிசக்தி

ஓம் பூர் புவ ஸ்வஹ **(மெட்டு)**

மஹா த்வஷ்டாயை வித்மஹே
ப்ரஜாரூபாயை தீமஹி
சுப யுவதி தீமஹி
தன்னோ சைத்ரா ப்ரசோதயாத்

வெளிப்படையான செயல்வடிவம்
வேந்தர்குரிய உயர்வளிக்கும்
தனித்தன்மையுடன் பெரும் அறிவும்
புனிதம் பெறுமே நமோ நமோ

ஏழு சக்திகள் அருள் கிடைக்கும்
ஏற்றம் தரும் நல்வாழ்வளிக்கும்
உள்ளம் குளிரும் நிலை கொடுக்கும்
உணர்வே உயர்வே நமோ நமோ

ஓம் சிவாய மே நம சிவாய மே
த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்

## 5. சித்திரை கவிதை

சித்திரையில் பிறந்த
அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகனே
வெண்திரையில் சிறந்த
துகிலாண்டகோடி பிரமிக்கும் வாலிபனே
அருள் திரையில் நிறைந்த
மயிலாண்ட முருகனை தரிசித்த பாலகனே
சித்திரையில் நிறைந்த
நீவீர் நீரில் ஏற்றிய விளக்கில் சாதகனே

பிரம்மாண்டமே, பிரமிப்பே, பிரமாத பிரசங்கமே
விரதமங்களமே, விராலியே, விளக்கமே, விலக்கமே
கிரம சங்கல்பமே, கிராம சஹஸ்ரமே, கிரணபூசமே
சிரம சந்தோஷமே, சிரம் காணா நிராலம்பனே, சீராளமே

குருதோஷ நிவர்த்தி, கோடி வரினம் இது கிடைக்காது
உரு தேச தரிசனம், கோடி தேடினும் இது கிடைக்காது
பரு நேச ஆன்மீகம், கோடி செய்யும் இது மறைக்காது
தரு அருள் எதிரிடை, கோடி பகைக்கும் இது மறைக்காது

அருட்பெருஞ்ஜோதி – ஆசை பெறுஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி – அதை தனக்கெனுஞ் ஜோதி
அருட்திரை ஆயினும் – இருள்நீக்கி ஒளிரும் ஜோதி
அருட்ஜோதி அதுவே ஜீவ ஜோதி – மாற்றே அசுர ஜோதி

தலைவன் நீயே! தக்காரும் தானே சேர்ந்த கூட்டம்
தாதா நீயே! மிக்காருக்கு தானே சேர்ந்த கும்பல்
திகிலும் நீயே! மிலேச்சருக்கு தானே எதிர்த்த குரவர்
தீயும் நீயே! முருகருக்கு தானே முளைத்த முனைவர்

பாராட்டாமல், பண்பாடாமல் நீ சோர்ந்திடுவாய்
தேரோட்டாமல், தீ காட்டாமல் நீ மூடிடுவாய்
காலாட்டாமல், கை உழைக்காமல் நீ வாடிடுவாய்
சொல்லாமல், கேட்காமல் நீ அருள் புரிவாய்

## 6. அபிராமி அந்தாதியில் சித்திரை சக்தி

**மரணத் துன்பம் இல்லாதிருக்க**

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவி வெங்கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும் அப்போது வளைக்கை அமைத்து
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்து அஞ்சல்என்பாய்;
நரம்பை அடுத்த இசைவடிவாய் நின்ற நாயகியே.

**அம்பிகையை நேரில் காண**

நாயகி; நான்முகி; நாராயணி; கை நளின பஞ்ச
சாயகி; சாம்பவி; சங்கரி; சாமளை; சாதிநச்சு
வாயகி; மாலினி; வாராகி; சூலினி; மாதங்கி என்று
ஆயகி ஆதி உடையாள் சரணம் அரண் நமக்கே.

**மோகம் நீங்க**

அரணம் பொருள் என்றருள் ஒன்றிலாத அசுரர் தங்கள்
முரண்அன்றழிய முனிந்த பெம்மானும், முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன் அடியார்
மரணம், பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே.

**பெருஞ்செல்வம் அடைய**

வையம், துரகம், மதகரி, மாமகுடம், சிவிகை
பெய்யும் கனகம், பெருவிலை ஆரம், பிறைமுடித்த
ஐயன் திருமனையாள் அடித்தாமரைக்கு, அன்பு முன்பு
செய்யும் தவம் உடையார்க்கு உளவாகிய சின்னங்களே.

**Video Link : https://youtu.be/iVb8ulEiZMg**

## 7. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் சித்திரை சக்தி ஓம்... ஓம்... ஓம்...

| | |
|---|---|
| ஓம் உத்தராய நம | – உத்தரா சமுத்திர கனியே போற்றி |
| ஓம் கோபதயே நம | – கோபதி என்னும் பசுபதியே போற்றி |
| ஓம் கோப்த்ரே நம | – முற்போக்கு பாதுகாவலரே போற்றி |
| ஓம் ஜ்ஞாநகம்யாய நம | – பல ஞானத்திற்கு அப்பாற்பட்டவரே போற்றி |
| ஓம் புராதநாய நம | – பழமையின் பெருமையே போற்றி |
| ஓம் ஸரீரபூப்ருதே நம | – பஞ்சபூத பூவுடலே போற்றி |
| ஓம் போக்த்ரே நம | – போகமருளும் வெளிப்படையே போற்றி |
| ஓம் கபீந்த்ராய நம | – வராக விரத இந்திரனே போற்றி |
| ஓம் பூரிதக்ஷிணாய நம | – யாகப் பரம்பொருளே போற்றி |
| ஓம் ஸோமபாய நம | – சோமபான புனிதமே போற்றி |
| ஓம் அம்ருதபாய நம | – அமிர்தமருளும் ஆனந்தமே போற்றி |
| ஓம் ஸோமாய நம | – நட்சத்திர நலங்காணும் மதியே போற்றி |
| ஓம் புருஜிதே நம | – வெற்றிவிழா நாயகனே போற்றி |
| ஓம் புருஸத்தமாய நம | – வெளிப்படை வேந்தர் நலமே போற்றி |
| ஓம் விநயாய நம | – விநயமான விமர்சனமே போற்றி |
| ஓம் ஜயாய நம | – வெற்றி அறிவு ஜீவகாருண்யமே போற்றி |
| ஓம் ஸத்யஸந்தாய நம | – அறிவு விளங்கிய சத்தியமே போற்றி |
| ஓம் தாஸார்ஹாய நம | – அன்னதான பிரபுவே போற்றி |
| ஓம் ஸாத்வதாம்பதயே நம | – மகாமந்திர தந்திரமே போற்றி |
| ஓம் ஜீவாய நம | – ஜீவர்களின் கர்தத்வமே போற்றி |
| ஓம் விநயிதாஸாக்ஷிணே நம | – கொல்லாமை கண்ட சாட்சியே போற்றி |
| ஓம் முகுந்தாய நம | – முக்திநெறி சாகாக்கலையே போற்றி |
| ஓம் அமிர்தவிக்ரமாய நம | – எல்லையில்லா கருணை உலகே போற்றி |
| ஓம் அம்போநிதயே நம | – தேவரும், தேவியரும் தானாக சேருமே போற்றி |
| ஓம் அநந்தாத்மநே நம | – யோம ஜோதி, வியோம ஜோதியே போற்றி |

ஓம் மஹோததிஸயாய நம – வளர்ப்பில் வித்தியாசங் காட்டுபவரே போற்றி

ஓம் அந்தகாய நம – முடிவுரையில் முன்னுரை காணுமே போற்றி

ஓம் அஜாய நம – ஆசைகள் அடங்குமே போற்றி

ஓம் மஹார்ஹாய நம – தகுதியான இறைப்பண்பே போற்றி

ஓம் ஸ்வாபாவ்யாய நம – ஆதியந்தமிலா முழுமை கல்வியே போற்றி

ஓம் ஜிதாமித்ராய நம – காமகுரோதத்தை வென்றவனே போற்றி

ஓம் ப்ரமோதாய நம – பேரானந்த அனுபூதியே போற்றி

ஓம் ஆநந்தாய நம – சுவர்க வாசலே போற்றி

ஓம் நந்தநாய நம – வெளிப்படை வேறுபாடே போற்றி

ஓம் நந்தாய நம – குறையிலாத கோட்பாடே போற்றி

ஓம் ஸத்ய தர்மணே நம – சத்திய பிரமாணமே போற்றி

ஓம் த்ரிவிக்ரமாய நம – உலகியலில் சாகாக்கலையே போற்றி

## <u>7.லலிதா ஸஹஸ்ரநாமத்தில் சித்திரை சக்தி</u>

தாபத்ரயாக்னி ஸந்தப்த ஸமாஹ்லாதன சந்த்ரிகா
தருணீ தாபஸாராத்யாதனுமத்யாதமோபஹா

சிதிஸ் தத்பதலக்ஷ்யார்த்தா சிதேகரஸ ரூபிணி
ஸ்வாத்மானந்தலவீபூதப்ரஹ்மாத்கானந்த ஸந்ததி

பராப்ரத்யக் சிதீ ரூபா பச்யந்தீ பரதேவதா
மத்யமாவைகரீ ரூபாபக்தமானஸ ஹம்ஸிகா

காமேச்வர ப்ராணநாடீ க்ரதஜ்ஞாகாமபூஜிதா
ச்ருங்கார ரஸ ஸம்பூர்ணா ஜயா ஜாலந்தரஸ்திதா

ஓட்யாண பீட நிலயா பிந்துமண்டல வாஸிநீ
ரஹோயாகக்ரமாராத்யாரஹஸ்தர்ப்பணதர்ப்பிதா

ஸத்ய ப்ரஸாதீனீ விச்வஸாக்ஷிணீ ஸாக்ஷிவர்ஜிதா
ஷடங்கதேவதாயுக்த ஷாட்குண்யபரிபூரிதா

**Video Link : https://youtu.be/DtSBLpQStT4**

## 8. கந்தகுரு கவசகத்தில் சித்திரை சக்தி

நன்கறிந்து கொண்டேன் நானும் உனதருளால்

விட்டிட மாட்டேன் ஸ்கந்தா வீட தருள்வீரே

நடுநெற்றித் தானத்து நானுனைத் தியானிப்பேன்

ப்ரம்ம மந்திரத்தைப் போதித்து வந்திடுவாய்

சுழுமுனை மார்க்கமாய் ஜோதியைக் காட்டிடுவாய்

சிவ யோகியாக எனைச் செய்திடும் குருநாதா

ஆசை அறுத்து அரனடியைக் காட்டிவிடும்

மெய்யடி யராக்கி மெய்வீட்டில் இருத்திவிடும்

கொங்கு நாட்டிலே கோயில் கொண்ட ஸ்கந்தகுரோ

கொல்லி மலைமேலே குமரகுரு வானவனே

கஞ்சமலை சித்தர் போற்றும் ஸ்கந்தகிரி குருநாதா

கருவூரார் போற்றும் காங்கேயா ஸ்கந்தகுரோ

மருதமலை சித்தன் மகிழ்ந்துபணி பரமகுரோ

சென்னிமலைக் குமரா சித்தர்க் கருள்வோனே

சிவவாக்கிய சித்தருளைச் சிவன்மலையில் போற்றுவரே

பழனியில் போகருமே பாரோர்வாழப் ப்ரதிஷ்ட்டித்தான்

புலிப்பாணி ஸித்தர்களால் புடைசூழ்ந்த குமரகுரோ

கொங்கில் மலிந்திட்ட ஸ்கந்த குருநாதா

கள்ளம் கபடமற்ற வெள்ளை யுள்ளம் அருள்வீரே

கற்றவர்களோ டென்னைக் களிப்புறச் செய்திடுமே

உலகெங்கும் நிறைந்திருந்தும் ஸ்கந்தகுரு உள்ள இடம்

ஸ்கந்தகிரி என்பதை நான் கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்.

**Video Link : https://youtu.be/fO7MD2St1iU**

**9. கந்தர் அநுபூதி சித்திரை சக்தி**

மெய்யே என வெவ்வினை வாழ்வை உகந்து
ஐயோ, அடியேன் அலையத் தகுமோ?
கையோ, அயிலோ, கழலோ முழுதும்
செய்யோய், மயில் ஏறிய சேவகனே.(25)

ஆதாரம் இலேன், அருளைப் பெறவே
நீதான் ஒரு சற்றும் நினைந்திலையே
வேதாகம ஞான விநோத, மன
அதீதா சுரலோக சிகாமணியே.(26)

**Video Link : https://youtu.be/x9sjGNdLHkw**

**10. ராகங்களில் சித்திரை சக்தி**

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| சலநடா | சலநடா | சாலகம் | ஜாலர்நவம் |

**11. மூலமந்திரம்**

கருடம், வரதம், தேவம் ஸ்ரீ விஷ்ணுப்ரிய
வாஹனம் ஸர்ப்பாதி விஷ ஹர்த்தாரம்,
ஸரஸாத்வாம்நமாம்யஹம்

**12. விருட்ச சக்தி பெற நட வேண்டிய மரம்**

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| வில்வம் | புரச | கொடுக்காபுளி | தங்கசுரளி |

**13. பரிகாரம்**

- கைபேசியை எவரேனும் ஒருவருக்கு தானம் செய்யவும்.
- இளைஞர்களுக்கு பேனா பென்சில் தானம் செய்யவும்.

- குறைந்தபட்சம் 7 நபர்களுக்கு உதவிடுக.
- உங்கள் வழிபாட்டிற்கு ஏற்றபடி மந்திரங்களை பாராயணம் செய்யவும்.
- கோவிலுக்கு சென்று சுவாமியை தரிசிக்கவும்.
- 2x2 கண்ணாடி வைத்து உங்கள் முகத்தை பார்த்து தியானம் செய்யவும். (ஆடி தியானம்).
- நட்சத்திர கோயில் **அருள்மிகு சித்திராத வல்லபபெருமாள் திருக்கோயில்,** குருவித்துறை - மதுரை.


Aathma Trust **(ஆத்ம லிங்கம்)**

Regd No: 96/19

33.கோசாலை, கிரிவலம்,

திருவண்ணாமலை - 600 501.

**Website :** www.aathmanakshtra.org

www.yaasha.in

**Email :** jhohumm@gmail.com

**Youtube :** aathmanakshatra